ஜப்பானிய ஹைகூ



தமிழில்:
தி. லீலாவதி

ஜப்பானிய வாழ்கை

தமிழில் :

டாக்டர் தி. லீலாவதி

அன்னம் (பி) லிட்

சிவகங்கை

அன்னம்—94

அன்னம் கிளை முகவரி :

36-B கட்ரா பாளையம் தெரு
(நன்மைதருவார் கோவில் சமீபம்)
மதுரை-625 001

ஜப்பானிய ஹைகூ

© டாக்டர் தி. லீலாவதி / முதற்பதிப்பு டிசம்பர் 1987 / வெளியீடு அன்னம் (பி) லிட்., சிவகங்கை / அச்சாக்கம் அகரம் சிவகங்கை / அட்டை-உள்ஓவியம் வீர.சந்தானம்/ விலை ரூபாய் 10.00

அறிமுகம்

ஒரு மொழியின் கவிதைகள் மற்ற மொழிகளில் பெயர்க்கப்படுவது வியப்புக்குரியதல்ல. ஆனால் ஒரு மொழியின் கவிதை வடிவம் உலக அளவில் புகழ் பெறுவதென்பது வியப்பானது. இத்தகைய வியப்புக் குரியது ஜப்பானிய ஹைகூ.

இந்தப் புகழுக்குக் காரணமுண்டு. உலகக் கவிதை வடிவங்களிலேயே ஹைகூவுக்கு யாரையும் மயக்கக் கூடிய வசிய சக்தி இருக்கிறது. யாரையும் படிக்கத் தூண்டும் அதன் சின்னஞ் சிறிய மூன்றடி வடிவம்; அழகான படிமங்களால் ஆழமான அர்த்த ரீங்காரங் களை எழுப்பும் அதன் நுட்பமான வெளியீட்டுமுறை; பிரபஞ்சத்தின் அந்தரங்கங்களைத் திடீரெனத்திரை

விலக்கிக் காட்டும் அதன் தத்துவப் பார்வை; சுண்டக்காய்ச்சிய அதன் இறுகிய மொழி நடை; எல்லாவற்றையும் விட அதன் எளிமை — இவையெல்லாம் ஹைகூவின் ஈர்ப்புக்குக் காரணம்.

5—7—5 என்ற அசை அமைப்பையுடைய மூன்றடிகளால் ஆனது ஹைகூ. உண்மையில் ஹைகூ, **டாங்கா** என்ற வடிவத்தின் ஓர் அங்கமாக அதன் முதற் பகுதியில் இருந்தது. பிற்காலத்தில் இந்த மூன்று அடிகளை மட்டும் தனியாகப் பிரித்து எடுத்து ஹைகூவாக்கிவிட்டார்கள்.

ஹைகூ ஜப்பானியர்களுக்கு ஒருவகையில் புதுக் கவிதைதான். **ரெங்கா, டாங்கா** போன்ற ஜப்பானிய மரபுக்கவிதை வடிவங்களின் இறுக்கமான இலக்கணக் கட்டுப்பாடுகளிலிருந்து விடுதலை பெற விரும்பிய போதுதான் ஹைகூ பிறந்தது. பதினைந்தாம் நூற்றாண்டில் தோன்றிய இந்தக் கவிதை வடிவம் தோன்றிய காலத்திலிருந்து சிறிதும் செல்வாக்குக் குறையாமல் வளர்ந்துகொண்டே வந்து ஜப்பானியர்களின் வாழ்க்கையிலிருந்து பிரிக்க முடியாத அம்சமாகக் கலந்துவிட்டது.

பழைய இலக்கணக் கட்டுப்பாடுகளிலிருந்து விடுதலை

பெற நாடி ஏற்படுத்திய வடிவம்தான் என்றாலும் ஹைகூ எல்லாவற்றையும் அவிழ்த்து எறிந்துவிட வில்லை. ஜப்பானியக் கவிதையின் ஆடை போன்ற மரபுகளை அது உடுத்திக் கொள்ளத்தான் செய்தது. காலப் போக்கில் புதிய இலக்கணங்களும் தோன்றி அதை மேலும் அழகும் ஆழமும் பெறச் செய்து விட்டன.

ஹைகூவின் இலக்கணம் என்பது வெறும் புறநிலை யான யாப்பு வடிவ இலக்கணம் மட்டுமல்ல. அதன் உள்ளடக்கத்திற்கும், வெளியீட்டு முறைக்கும் கூட இலக்கணம் உண்டு. உண்மையில் இந்த இலக்கணங் களே ஹைகூவுக்கு உலக இலக்கிய வடிவங்களில் உன்னதமான இடத்தைப் பெற்றுத் தந்திருக் கின்றன.

ஹைகூ பெரும்பாலும் பருவங்களின் மாற்றங்களை, அந்த மாற்றங்கள் மனித மனத்தில் ஏற்படுத்தும் பாதிப்புக்களையே சித்திரிக்கும். பருவங்களைச் சித்திரிப்பதற்கு அந்தப் பருவத்திற்குரிய ஏதேனும் ஒரு காட்சியை, நிகழ்வை ஹைகூக் கவிஞர்கள் பயன் படுத்துகிறார்கள். பருவங்களைக் குறிப்பாக உணர்த்துவதற்காக அவர்கள் பருவக் குறியீட்டுச் சொற்களையும் (கிகோ) கையாளுகிறார்கள்.

எடுத்துக் காட்டாக இளவேனில் பருவத்தைச் சுட்ட வேண்டுமென்றால் செர்ரிப் பூவைப் பயன்படுத்து வார்கள். இவ்வாறே சிள் வண்டு கோடைப் பரு வத்தையும்,காவல் பொம்மை இலையுதிர் காலத்தை யும், கூடுதல் மழை குளிர் காலத்தையும் குறிக்கும்.

ஹைகூவின் மிக முக்கியமான பண்பு அதன் **ஜென்** தத்துவப் பார்வை. புத்த மதத்தின் ஒரு பிரிவாகிய **ஜென்** ஜப்பானியர்களுடைய வாழ்க்கையில் பேராதிக் கம் செலுத்தும் தத்துவம். அதன் அடிப்படையை ஓரளவுக்காவது புரிந்துகொண்டால்தான் ஹைகூவின் ஆழங்களைச் சுவைக்க முடியும்.

இந்தப்பிரபஞ்சத்தில் உள்ள எல்லாப்படைப்புக்களும் நிலையான, எல்லையற்ற வாழ்வுக் கடலிலிருந்து உதித்து மறையும் தற்காலிக வெளிப்பாடுகளே.

பெரிய மலையானலும் சரி, சிறிய மலரானாலும் சரி ஒவ்வொரு பொருளும் பிரபஞ்சத்தின் சம மதிப் புடைய அங்கமே. ஒரே மூலத்திலிருந்து உதித்தவை என்பதால் எல்லாப் படைப்புக்களும் ஒன்றோ டொன்று சகோதர உறவுடையவை.இதுதான் ஜென் னின் அடிப்படைக்கோட்பாடு.ஒவ்வொரு ஹைகூவும் இந்தக் கோட்பாட்டுப் பார்வையிலேயே உருவா

கிறது. (விதி விலக்குகளும் உண்டு; அவை மிகச் சிலவே.) சரியாகச் சொல்வதானால் ஹைகூ வெறும் கவிதையல்ல; திரைகளை விலக்கி மெய்ப் பொருளைத் தரிசிக்க உதவும் தியான சாதனம்.

ஹைகூவில் பெரும்பாலும் இரண்டு படிமங்கள்—சித்திரங்கள் இருக்கும். மேலோட்டமாகப் பார்த்தால் அந்த இரண்டிற்கும் சம்பந்தம் எதுவும் இருப்பதாகத் தெரியாது. ஆனால் ஆழ்ந்து சிந்தித்தால் அந்த இரண்டிற்கும் உள்ள அந்தரங்க உறவு புலப்படத் தொடங்கும். அப்பொழுது ஏற்படும் பிரமிப்பும் பரவசமும் அனுபவித்துத் தான் உணர முடியும்.

ஜப்பானியர்களின் கூர்மையான கலையுள்ளம் குறிப்பாக உணர்த்துவதே கவிதையின் உயர்ந்த பண்பு என்று அறிந்திருந்தது. எனவே ஹைகூவும் உணர்த்த வேண்டியதைக் குறிப்பாகவே உணர்த்து கிறது.

தன் உள்ளத்தில் திடீரென்று ஒளி ஏற்றிய ஒரு காட்சியை—நிகழ்வை ஹைகூக் கவிஞன் அப்படியே சித்திரிக்கிறான். தனக்கு நேர்ந்த உணர்வுக்கிளர்ச்சிகளை அவன் விவரித்துக் கொண்டிருப்பதில்லை.

மோரிடாகே (1473-1549), சோகன் (1465-1553) என்பவர்கள்தாம் ஹைகூவின் முன்னோடிகள். என்றாலும் பாஷோ (1644-94) தான் மிகப் பெரிய ஹைகூக் கவிஞர். அவர்தான் ஹைகூவிற்குப் பூரண வடிவம் கொடுத்து இலக்கியத் தகுதியை ஏற்படுத்தியவர். புனைவியலின் கற்பனாவாதத்திலிருந்து அன்றாட வாழ்வின் யதார்த்த நிலைக்கு ஹைகூவைக் கொண்டு வந்தவரும் அவரே. ஹைகூவிற்கு ஜென்னின் ஆழத்தை ஏற்படுத்திய பெருமையும் அவரையே சாரும்.

பாஷோவிற்குப் பிறகு ஹைகூவிற்கு மேன்மையையும் புலனுணர்வு வண்ணத்தையும் தந்த பூசன் (1716-83) ஹைகூவை சாமான்யர்களின் கையில் கொண்டுவந்து கொடுத்த இஸ்ஸா (1763–1827), ஹைகூவில் இயற்கையான, உண்மையான சித்திரங்களையே வரைய வேண்டும் என்ற ஷிகி (1867-1902)ஆகியோர் ஹைகூவின் பரிணாம வரலாற்றில் குறிப்பிடத் தகுந்தோராவர்.

ஹைகூ இன்றைக்கும் ஜப்பானியர் வாழ்வில் உயிர்ப்போடு வாழ்கிறது. இன்றைக்கும் ஹைகூ சங்கங்கள் இருக்கின்றன. எந்த விருந்தும் ஹைகூ வாசிப்பில்லாமல் நிகழ்வதில்லை.ஒவ்வோர் ஆண்டும் ஆயிரக்கணக்

கான ஹைகூக்கள் இதழ்களில் பிரசுரிக்கப்படுகின்றன. புத்தாண்டு தோறும் சக்கரவர்த்தியின் ஹைகூப் போட்டிப் பரிசும் உண்டு. உழவர், தரகர், வணிகர், எல்லோரும் ஹைகூ எழுதுகின்றனர்.

புதுக்கவிதையிலும் தாக்கத்தை ஏற்படுத்திய சிறப்பு ஹைகூவுக்கு உண்டு, ஹைகூவின் படிம அழகில் ஈடுபட்ட எஸ்ரா பவுண்ட் அதன்பண்புகளை அடிப்படையாக வைத்தே தம்முடையபடிமம்பற்றிய கொள்கைகளை உருவாக்கினார்.

இவ்வளவு மகத்துவம் உடைய ஹைகூவோடு எனக்கு அறிமுகம் ஏற்பட்ட பொழுதே இதைத் தமிழுக்குக் கொண்டு வர வேண்டும் என்று ஆசைப்பட்டேன். பல இடங்களில் வேட்டையாடி ஹைகூ தொகுதிகளைச் சேகரித்தேன். ஆனால் எனக்கிருந்த பல்வேறு பணிகளின் காரணமாக என் ஆசை தடைபட்டுக்கொண்டே வந்தது.

ஒரு நாள் டாக்டர் லீலாவதியிடம் 'நீங்களாவது மொழிபெயர்த்துக் கொடுங்களேன்' என்று கூறி என்னிடமிருந்த தொகுதிகளையும் கொடுத்தேன்.

யாரையும் வசியப்படுத்தும் ஹைகூ அவரையும் வசி

யப் படுத்திவிட்டது. இந்தமொழிபெயர்ப்பை ஆழ்ந்த ஈடுபாட்டோடு செய்து கொடுத்தார். இதற்கு முன்னுரை எழுதுகிறேன் பேர்வழி என்று நான் அநியாயமாக நாள் கடத்தி விட்டேன். இடையில் பல்வேறு பணிகளின் குறுக்கீடு. புதிய வடிவமாயிற்றே, கொஞ்சம் விரிவாக விளக்கிச் சொல்லலாம் என்று இறங்கிப்போய் அது தனி நூலாக வெளியிடும் அளவுக்கு விரிந்துபோய் விட்டது. எனவே அதை எடுத்துவைத்து விட்டு மிகமுக்கியமான விஷயங்களை மட்டும் சொல்லுகின்ற இந்த முன்னுரையை எழுதினேன்.

இதை இவ்வளவு தாமதமாக வெளியிடும் குற்றம் என்னுடையது. கையெழுத்துப் பிரதியாக இருக்கும் போதே இந்த மொழி பெயர்ப்பு சில விளைவுகளை ஏற்படுத்தி விட்டது. லீலாவதியே அதைப் பற்றி எழுதியிருக்கிறார். அவர் மொழி பெயர்த்துக் கொடுத்தவற்றுள் தமிழ் மனம் கொஞ்சம் சிரமமில்லாமல் வாங்கிக் கொள்ளக் கூடியவைகளை மட்டும் தேர்ந்தெடுத்து இங்கு கொடுத்திருக்கிறேன்.

வாணியம்பாடி
5—12—87

அப்துல்ரகுமான்

முன்னுரை

ஹைகூ கீழ்த்திசைப் பண்பாட்டில் இறுதியாக மலர்ந்தமலர். அது வெறும் கவிதை அல்ல; ஒரு வாழ்வு முறை.

ஜென் தத்துவக் கோட்பாட்டின் இலக்கிய வடிவம் ஹைகூ. உலகியலுடன் ஒன்றுவதும், தனித்து நிற்பதுமான இருநிலைப் போக்கின் ஒருநிலைத் தத்துவம்தான் ஜென். இருப்பதில் இல்லாததும், இல்லாததில் இருப்பதும், எல்லாவற்றிலும் இருப்பையும், இல்லாமையையும் காண்பதுதான் ஜென் என்றால் தலை சுற்றலாம். ஆனாலும் இந்தத் தத்துவம்தான் பிரபஞ்சத்தின் முரண்பாடு களுக்குள் ஒளிந்திருக்கும் ஒருமையின் மர்மத்தை அழகாக உணர்த்துகிறது.

ஹைகூ ஒரு சத்தியத் தேடல்; சுற்றுப்புறத்தைப் பார்க்கும் ஒரு தனிப் பார்வை; ஒருவகை வாழ்வு முறை; ஒருவகை மென்மை; பெரியதைப் புறக்கணிக் கும் சிறிது. அது எல்லையற்றது; நிரந்தரமானது.

கீழ்த்திசை பௌத்தச் சிந்தனையில் அரும்பி, சீனத்துப் பண்பாட்டில் போதாகி, ஜப்பானிய அழகுப் பார்வையில் மலர்ந்து மணம் பரப்பும் மலர் ஹைகூ. இந்திய, சீன, ஜப்பானிய பௌத்தக் கூறுகள், தாவோயிசம், கன்பூஷியனிசம், சீனக் கலை, ஜப்பானிய ஓவியம், இகபானா மலர்க்கலை என்று இவையெல்லாம் சங்கமித்துக் கலந்து புதிய பரிமாணம் பெற்ற வடிவம் ஹைகூ.

இந்தச் சின்னஞ் சிறு தத்துவ தரிசன ஒளி மலர்கள் ஆங்கிலக் கவிஞர்களைக் கவர்ந்திருக்கின்றன; பிரெஞ்சுப் புலவர்களை ஈர்த்திருக்கின்றன.

ஹைகூவை முதன் முதலில் தமிழில் மொழிபெயர்த்தவர் சி. மணி — 'நடை' இதழில் ஹைகூக்களின் மொழிபெயர்ப்பு வெளிவந்தது.

1974-இல் வெளிவந்த 'பால்வீதி'யில் 'சிந்தர்' என்ற அர்த்தம் செறிந்த தலைப்பில் அப்துல் ரகுமான் எழுதிய ஹைகூக்கள் வெளிவந்தன. இந்த ஹைகூக்களை 1970 வாக்கில் எழுதியதாக அவர் குறிப்பிட்டிருக்கிறார். ஹைகூவின் வடிவம் மட்டு

மின்றி அதன் மற்றப் பரிமாணங்களையும் அப்துல் ரகுமான் கவிதைகளில் காண முடிகிறது. எனவே இவற்றைத் தமிழில் வெளிவந்த முதல் ஹைகூக்கள் எனலாம். வாணியம்பாடி 'ஏதேன்' இலக்கிய வட்டத்தில் ஹைகூ வகுப்புக்களை நடத்திப் பலரை ஹைகூ எழுதத் தூண்டியிருக்கிறார். 18-1-84-இல் 'ஜூனியர் விகட'னில் அவர் எழுதிய 'மின்மினிகள்' என்ற கட்டுரைதான் ஹைகூ பற்றித் தமிழில் வெளிவந்த முதல் கட்டுரை. ஹைகூவின் வளத்தைத் தமிழ்ப் புதுக்கவிதைக்குத் தர வேண்டும் என்ற ஆசையில் அவர் இதை ஒரு பிரச்சாரமாகவே செய்து வருகிறார்.

இந்த மொழிபெயர்ப்புக்கும் அவர்தான் காரணம். 1982இல் என்னிடம் அவரிடமிருந்த ஹைகூ தொகுதிகளைக் கொடுத்து மொழிபெயர்க்கச் சொன்னார். ஹைகூ என்ற அற்புதமான உலகை எனக்கு அறிமுகப்படுத்திய பெருமை அவரையே சாரும்.

அந்த உலகில் நான் மூழ்கினேன். சிள் வண்டும், வண்ணத்துப் பூச்சியும், பனித்துளியும், நிலவும்,

சோளக் காட்டுப் பொம்மையும்,வாழ்க்கைச் சோகங்களும், இன்பச் சிலிர்ப்புகளும், ஆழங்காண முடியாத அர்த்த மகிமைகளும் என்னை ஆட்டிப் படைத்து அடிமைப்படுத்தின. காலையும், மாலையும், கடும்பகல் பொழுதுகளும் ஹைகூக்களாய் மாறின. இரண்டே மாதங்களில் இருநூற்றிற்கும் மேற்பட்ட ஹைகூக்களைத் தமிழ்ப்படுத்திக் கொடுத்தேன். இங்கிருந்துதான் சிக்கல் தோன்றியது.

முன்னுரைக்காக அப்துல் ரகுமானிடம் கிடந்த என் மொழிபெயர்ப்பு ஏடு அறிவுமதியின் பார்வையில் பட்டது; பட வைத்தது ரகுமான்தான். கவிதை உலகம் தவிர நடைமுறை வாழ்க்கைப் போக்குகள் பற்றி அதிகம் கவலைப்படாத அவர் என் ஏட்டை அறிவுமதிக்கு 'வழங்கி' விட்டார். எல்லாவற்றையும் நண்பர்களிடம் பரிமாறிக் கொள்ளும் அறிவுமதி யார்யாரிடமோ அதைக் காட்ட இப்படியாகத் தானே தமிழில் 'முதல் ஹைகூத் தொகுதி' வெளி வந்து விட்டது. இந்தக் கால கட்டத்தில் அறிவு மதியும்—அப்துல் ரகுமானுடைய 'ஏதேன் ஹைகூ வகுப்புகளிலிருந்தும், என் மொழி பெயர்ப்பிலிருந்தும், தூண்டுதல் பெற்று ஹைகூக்களை எழுதிக்

கொண்டிருந்தார். தமிழில் முதல் ஹைகூத் தொகுதியாக வந்திருக்க வேண்டிய அவருடைய நூல், அவருடைய தவறு காரணமாகவே இரண்டாவது தொகுதியாக வெளிவந்தது.

அப்துல்ரகுமான் தம்முடைய கவிதை வாழ்வில் அடிக்கடி இத்தகைய விபத்துக்களைச் சந்தித்திருக்கிறார். அவருடைய பாதிப்பால் கவிதை எழுத ஆரம்பித்தவர்கள் எல்லாம் அவருக்கு முன்னால் தொகுதிகளை வெளியிட்டுக் கொண்டதுமன்றி, 'நாங்கள்தான் முன்னோடிகள்' என்றும் வாய் கூசாமல் தம்பட்டம் அடிக்கின்ற அநாகரிகங்கள் எல்லாம் நடந்தன.

மொழி பெயர்ப்புப் பற்றி ஒரு வார்த்தை.

மொழிபெயர்ப்பு ரகசியங்கள், அமைப்புகள் இவற்றிற்கு வழிகாட்டி உதவியவர் அப்துல் ரகுமான். அவருடைய தூண்டுதலால்தான் நான் இந்தப் பணியை மேற்கொண்டேன், இந்த உலகத்தை எனக்கு அவர் அறிமுகப்படுத்தியதன் விளைவாக ஹைகூக்களைப் பற்றிய பிறப்பு வரலாற்றையும் தனி நூலாக எழுதிக்கொண்டிருக்கிறேன். இதற்

கெல்லாம் அவருக்கு நான் நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஹைகூவின் மூல அழகுகள் முழுவதையும் மொழி பெயர்ப்பில் தர முடியாது. ஆங்கில மொழிபெயர்ப்பு வாயிலாகவே இதை நான் செய்திருக்கிறேன். கட்டமைப்பு அர்த்த வீச்சுகள் பெரிதும் சிதையாத படி முயற்சி செய்திருக்கிறேன். ஹைகூவின் படிம அழகை எந்த மொழிபெயர்ப்பும் கெடுத்துவிட முடியாது. அந்த நம்பிக்கையிலேயே இதை உங்களுக்குத் தருகிறேன்.

சென்னை
2—11—86

தி. லீலாவதி

ABOUT HAIKU...

Hundreds of years ago as the result of poetry contests there evolved in Japan a form of verse known as hokku, ''sending verse,'' or haiku ''play verse.'' Such verses were also called haikai ''suitable play,' but the word haiku is now in more general use. The form is very simple—only three lines, five syllables in the first line, seven in the second, and five in the third, a total of seventeen syllables. Within this limited compass a great variety of thought may be expressed. Some of the favorite subjects of the Japanese muse are the brevity of life, women, birds and other animals, insects, trees and flowers, mountains, the moon, sunrise, snow, rain, mists, and other aspects of nature. There is always a seasonal reference, sometimes very indirect, as ''a cold moon''—winter, ''plum blossoms''—spring, ''fireflies''—summer, or ''maple leaves''—autumn.

In haiku there is much use of symbolism, and the hidden suggestion is often subtle,though expressed in simple language. Keen observation and love of nature are shown.These outstanding characteristics of Japanese poetry are frequently accompanied by considerable appeal to emotion. Many haiku are beautiful word pictures, but not elaborate description. There is much understatement and omission, the reader being left to fillin the idea and make his own interpretation. Not a few haiku may be interpreted in a number of different ways, the Japanese language being very flexible. Puns are highly valued in both speech and writing.

The strong influence of Zen Buddhism with its emphasis on mysticism and contemplation is evident in many of the verses. This is not surprising since many haiku writers were itinerant priests or members of monasteries.

From the preface of "ONE HUNDRED FAMOUS HAIKU" by DANIEL C. BUCHANAN

THE HAIKU is a seventeen-syllable poetic form that has been written in Japan for three hundred years. It has been enormously popular without becoming banal. For the haiku does not make a complete poem in our usual sense; it is a lightly-sketched picture the reader is expected to fillin from his own memories. Often there are two pictures, and the reader is expected to respond with heightened awareness of the mystical relationship between non-related subjects.


This mystical awareness is one of the seekings of Zen Buddhism, and was introduced into haiku by the first, best-loved, greatest master of the form, Basho (1644–1694). A second master was Buson (1715-1783), a poet less interested in mystical relationships than in exquisite vignettes. A third was Issa (1763–1827), pathetic, wryly humorous, utterly individual. A fourth was Shiki (1866-1902)— a modern Buson who gives us perfectly-phrased glimpses of everyday scenes and situations.

-From "THE FOUR SEASONS"
Translation by PETER BEILENSON

Because the haiku is shorter than other forms of poetry it naturally has to depend for its effect on the power of suggestion, even more than they do. As haiku are studied further, it will be seen that they usually gain their effect not only by suggesting a mood, but also by giving a clear-cut picture which serves as a starting point for trains of thought and emotion. But, again owing to their shortness, haiku can seldom give the picture in detail. Only the outlines or important parts are drawn, and the rest the reader must fillin for himself. Haiku indeed have a very close resemblance to the "ink sketches" so dear to the hearts of the Japanese.

From "AN INTRODUCTION TO HAIKU"
by HAROLD G. HENDERSON

[illegible] տաղեր



1

நாற்று நடும் பெண்கள்
எல்லாம் அழுக்கு அவர்களிடம்
அவர்கள் பாடலைத் தவிர

○ ராய்ஸான்

2

என் மடிந்த நம்பிக்கைகள்
வாடிய கனவுகள்.. ஆனால் இன்னும்
ஒவ்வொரு வசந்தத்திலும் பூ!

○ ஷுஷுகி

3

கார்மேகக் கரையுடைந்து
சிதறுகிறது இரவில்.. அதோ!
நிலவொளிரும் மலைகள்!

○ பாஷோ



4

இந்த வண்ணக் கிண்ணத்தில்
மலர்களை வைப்போம்
அரிசிதான் இல்லையே

○ பாஷோ

5

வீழ்ந்த மலர்
கிளைக்குத் திரும்புகிறதா?
வண்ணத்துப் பூச்சி!

○ மோரிடாகி

6

அடடே! என் சின்னக் குடிசை
புதிதாக வேய்ந்து.. ஓகோ!
நீலப் பூக்கள்.

○ இஸ்ஸா



7

மலைரோஜா இதழ்கள்
உதிர்ந்து.. உதிர்ந்து.. இப்போது
அருவியின் சங்கீதம்!

○ பாஷோ

8

இடிந்த வீட்டின் அருகே
பூத்து நிற்கும் கனிமரம்..
பழைய போர்க்களம்

○ ஷிகி

9

வட்ட நிலாவை எடு
கொம்பை முறித்துக் கைப்பிடி ஆக்கு
ஓ.. எத்தனை அழகான விசிறி!

○ ஸோகன்



10

பனித்துளியே! உன் புனித நீரில்
கழுவிக் கொள்கிறேன்
இந்த வாழ்க்கையின் கறுப்புக் கைகளை.

○ பாஷோ

11


மின்னல் வெட்டி மறைந்தது
மூங்கில் இலையில் காத்திருந்து..
வீழ்ந்தன பனித்துளிகள்

○ பூஸன்

12

வாழ்க்கை! அசைந்தாடும் புல்லின்மேல்
வண்ணத்துப் பூச்சி.. அவ்வளவுதான்
ஆனால் எத்தனை அழகு!

○ ஸோயின்



13

ஆர்வம் மிக்க மலர் இறந்தது
நடந்த எங்களைப் பார்த்தபடி..
எங்கள் பசித்த கழுதை.

○ பாஷோ

14

வசந்தம் போகத்தான் வேண்டுமா?
பறவைகள் அழுதன. மீன்களின்
வெளிறிய கண்களில் நீர்.

○ பாஷோ

15

சோக உலகம்
அழகிய பூக்கள் உதிரும்
நம்மைப் போலவே.

○ இஸ்ஸா



16

வெள்ளைப் பூக்களை வருணிக்கவா?
என் கவிதைகளை விட அழகு;
ஊமை வண்ணத்துப் பூச்சிகள்!

○ ரேய்கான்

17

பரிதாபம்.. என் விரிந்த கையில்
அந்திப் பொழுதில் இறந்தது
மின்மினிப் பூச்சி

○ கியோராய்

18

முட்டாள் வயற்காட்டுப் பொம்மையே!
உன் குச்சிக் காலடியிலேயே
கதிரைத் திருடும் பறவைகள்.

○ தாயூ



19

அழகிய வண்ணத்துப் பூச்சிகளே!
ஊசியிலை நுனிகள்.. கவனம்.. கவனம்
சூறைக் காற்று.

○ ஷ-ஸென்

20


ரீங்கார வண்டு
மலர்களைப் பண்டமாற்று செய்யும்
வண்ணத்துப் பூச்சிகளுடன்

○ தாய்கி

21

சாயுங்காலத்துக் குருவியே!
என் சின்னஞ்சிறு ரீங்கார நண்பர்களைப்
பூக்களிடையே விட்டுவிடு.

○ பாஷோ



22

இருள் படிந்து உறங்கும் குளம்
திடீரெனத் தவளையின் பாய்ச்சல்
நீர்ச்சப்தம்!

○ பாஷோ

23

மர நிழல் படிந்த என் பாதை
நாளெல்லாம் பெருக்கி நிமிர்ந்தால்
மலர் மாரிப் பொழிவு!

○ யாஹா

24

சேற்றை விட்டு வெளியே வாருங்கள்
கிழட்டுத் தவளைகளே! இருட்டுக்கு
ஆணையிடுங்கள்!
பாருங்கள்.. நட்சத்திரங்கள்!

○ கிகாகு



25

மலை மேலே இப்போது
பூர்ணிமை நிலவு சிரிக்கிறது
பூத் திருடனைப் பார்த்து.

○ இஸ்ஸா

26


வெட்டுக் கிளி நண்பனே!
காவல் வேலை செய்வாயா?
என் சின்னஞ்சிறு கல்லறையில்.

○ இஸ்ஸா

27

அந்திமாலைச் சோகம்
கொடியவன் நான்.. கரம் நீட்டினேன்
மலரைப் பறிப்பதற்கு.

○ பூஸன்



28

வாண வேடிக்கை முடிவில்
நானும் என் தனிமையும்
அதோ! எரிநட்சத்திரம்!

○ ஷிகி

29


மயங்கிச் சுழலும் வெட்டுக்கிளியே!
கவனம்.. துள்ளி உடைத்துவிடாதே!
பனித்துளி முத்துக்களை.

○ இஸ்ஸா

30

வண்ண விசிறி வியாபாரி
காற்றைச் சுமந்து செல்கிறான்..
மூச்சுத் திணறும் புழுக்கம்.

○ ஷிகி



31

இருண்ட காட்டில்
கோடரி பேசும்
மரங் கொத்தியுடன்.

○ பூஸன்

32

வண்ணத்துப் பூச்சிச் சீமாட்டி
சிறகிற்கு மணம் ஊட்டுகிறாள்
மலர்களில் அமர்ந்து

○ பாஷோ

33

அரசனுக்குக் கூட
தொப்பி எடுத்து வணங்குவதில்லை
வயற்காட்டுப் பொம்மை

○ டான்சூய்



34

நட்சத்திரங்கள் மின்னும் இரவு..
அசட்டுப் பெண்ணின் புலம்பல்
நான் விளக்கை ஏற்றவா?

○ இட்சுஜின்

35

அழுக்குக் குளியல் நீரே!
எங்கே உன்னை ஊற்றுவது?
புல்லில் பூச்சிகளின் பாடல்.

○ ஒனிட்சுரா

36

நீண்ட கோடைப் பகல்
கடல் மணலில் கோலங்கள்..
நம் சோம்பிய காலடிச் சுவடுகள்.

○ ஷிகி



37

காற்றில்லா அமைதி வேளை
அதோ பார்! அந்தப் பழுத்த இலை
தானே விரும்பி வீழ்கிறது

○ பான்சோ

38

இலையுதிர்காலப் பூர்ணிமை நிலவு..
ஒவ்வொரு புல்லின் நிழலிலும்
பூச்சியின் ஓசை

○ பூஸன்

39

ஒற்றைச் சிள்வண்டு
கத்திக்.. கத்திக்.. கத்தி.. அமைதி
என் மெழுகு வர்த்தி மங்கிச் செத்தது.

○ பேரிலான்



46

பனி விழும் காலை
நான் வெறுத்த அக் கருங்காக்கை
அடடே! என்ன அழகு!

○ பாஷோ

47


முதுமை அடையக் கூடாதென்று
முடிவு செய்தேன்..
அதோ கேள்! புத்தாண்டு மணியோசை!

○ ஜோகுன்

48

ஒற்றை இலை படபடக்கும்..
அந்தோ! ஒற்றை இலை படபடக்கும்..
காற்றில் உதிர்ந்து விழும்போது.

○ பேரிலான்



49

இலையுதிர் காலக் காற்று
மலர்களைச் சிதறும்.. சில இதழ்கள்
வீழும் ஜோடியாய்

○ பூஸன்

50

குயில் அழைத்தது
அடடே! மூங்கிற் புதர்களில்
நிலவுச் சுடர் விளக்குகள்.

○ ஸாய்காகு

51

ஏழைக் கிராம மக்கள்
மீனும் இல்லை பூவும் இல்லை
நிலவைப் பகிர்ந்து கொள்ளலாம்

○ ஸாய்காகு



52

அழகிய செர்ரிப் பூக்காட்டில்
மரங்கொத்தி தேடி அலையும்
பட்ட மரத்தை!

○ ஜோஸோ

53


வருந்துகிறேன்.. இந்த வேளையிலா
சாவு வர வேண்டும்?
மரமெலாம் பூப்பு.

○ ராய்ஸான்

54

ஏன் அழுகிறாய் சிள்வண்டே?
ஒருவேளை உன் கணவனை
எங்கள் பூனை பிடித்துவிட்டதா?

○ கிகாகு



55

எதையும் நான் தொடுவது
மென்மையாகத்தான்.. ஆனால்
முள்ளாய் உறுத்துகிறதே!

○ இஸ்ஸா

56

விடை பெறுகிறோம்..
மலர்ச் சுகத்தை நீங்க விரும்பாத
வண்டைப் போல.

○ பாஷோ

57

அந்தியில் வீடு திரும்பும்
தேனீக்கள்.. மதுச் சுமையோடு
குருவிகளே! அவற்றை விட்டுவிடுங்கள்.

○ பாஷோ



58

பணிவான மனச் செவியிடம்
பேசிக் கொண்டே இருக்கும்
ஓசையில்லா மலர்

○ ஓனிட்சுரா

59

பசியால் வாடும் குழந்தை
மாவரைக்கச் சொன்னால்
நிலாவை வேடிக்கை பார்க்கும்

○ பாஷோ

60

நிழலில் மலர்கள்
கிழக்கில் உதிக்கும் நிலவு
மேற்கில் மறையும் சூரியன்.

○ பூஸன்



61

எங்கள். எலும்புக் கூடுகளை
திருவிழா ஆடைகளால் மறைப்போம்
அழிவில்லா மலர்களைக் காண..

○ ஒனிட்சுரா

62


எந்த இலை முதலில் விழும்?
இலைகளுக்கு எப்போதுமே தெரியாது.
காற்றாவது அறியுமா?

○ சொசெகி

63

உபதேசிக்காதே! சிள்வண்டே!
எனக்கு அக்கறை இல்லை
இலையுதிர் காலம் இது..அறிவேன்.

○ சொசெகி



64

மணியோசைக்குப் பின் அமைதி
மலர்களின் ஓசை இப்போது
சுகந்த ஓசை

○ பாஷோ

65


நட்சத்திரங்கள் பூத்த இரவு
யாருடைய ஆவியின் முணுமுணுப்பு இது
'விளக்கை நான் ஏற்றவா?'

○ எட்சுஜின்

66

சின்னப் பறவையே! மன்னிப்பாய்!
உன் பாட்டின் முடிவைக் கேட்பேன்
இன்னொரு உலகத்தில்.

○ பேரிலான்



67

மொட்டைக் கிளையில் ஒற்றைக் காக்கை
எச்சரிக்கையாய்ப் பார்க்கிறது..
சூரியாஸ்தமனம்.

○ பாஷோ

68

நான் பிறந்த ஊரில்
இன்றிரவு என் நண்பர்கள்
சிள் வண்டுகள் மட்டும்.

○ பேரிலான்

69

புதுப்பிறை அழகாகத் தீட்டும்
வெள்ளி ஹைகூ
அலைகளின் நுனியில்.

○ கியோஷி



70

குயிலே! வேண்டுமென்றால்
நிலவிடம் புலம்பு! என்னிடம் வேண்டாம்
கேட்ட கதைதானே.

○ சொசேகி

71

வண்ணத்துப் பூச்சியே! என் தூரிகை
உதிர்க்கும் சொற்கள் மலர்களல்ல
அவற்றின் நிழல்கள்.

○ சொசேகி

72

அண்டைவீட்டுக்காரன் இரவெல்லாம்
புல்லாங் குழலில் ஓலமிட
ஏன் தூண்டினாய்? நிலவே!

○ கோயோ



73

பூச்சிகள் மொழி
மக்கள் மொழி..கேட்க
வேறு வேறு செவிகளன்றோ?

○ ஷிகி

74


இந்த வசந்தத்தில் என் வீடு
உண்மையில் ஒன்றுமேயில்லை..
அப்படியென்றால்
எல்லாம் இருக்கிறது.

○ ஸோடோ

75

வருக வருக என்று அழைத்தேன்
ஆனால் மின்மினிகள்.. மின்னி
மறைந்தன இருளில்.

○ ஒனிட்சுரா



76

மலையருவிக் கற்களும் கூடக்
கவி பாடும்
காட்டு மலர்களுக்காக.

○ ஒனிட்சுரா

77

எத்தனை அற்புதமான நாள்
கிராமத்தில் யாருமே
எதுவுமே செய்யவில்லை.

○ ஷிகி

78

குரல் மட்டும் இல்லையென்றால்
காலைப் பனியில் காணாமல் போயிருக்கும்
வெள்ளை நாரைகள்

○ சியோ



79

பாடல்களில் உயர்ந்த பாடல்
வசந்தம்
பாடிய கவிஞன் யாரோ?

○ ஷிகி

80

என் இனிய முதற் கனவு..
அவர்கள் சிரிக்கிறார்கள்
நான் இட்டுக் கட்டியதாம்.

○ தாகுசி

81

புத்தாண்டுக் காலையில்
விருந்தினரைப் போல அழகிதான்
என் சாதாரண மனைவி கூட.

○ இஸோ



82

குழந்தையில்லா மனையாள்
எத்தனை மெதுவாய்த் தொடுகிறாள்!
விற்பனைப் பொம்மைகளை.

○ ரான்செட்சு

83

மின்மினி மின்னி மறைந்தது
அந்த ஒரு கணப் பொழுது
ஓ... எவ்வளவு தனிமை இருள்!

○ ஹோகுஷி

84

நீரில் படிந்த நிலவு
மீண்டும் மீண்டும் உடைந்தாலும்..
திடமான முத்திரைதான்

○ சோசு



85

பிடித்துச் சிறையில் அடைக்க
எடுத்த வேளை.. மின்மினி
விரல் நுனியில் விளக்கேற்றும்

○ தாய்கி

86


பார வண்டி சப்தத்தில்
அதிர்ந்தது சாலை.. விழித்தது
ஒற்றை வண்ணத்துப் பூச்சி.

○ ஷோஹா

87

நீரில் மிதக்கும் நாரை
கலையும் வரை கொத்தும்
நிலாப் பிம்பத்தை.

○ ஜாயிர்யூ



88

வாழ்த்துக்கள் இஸ்ஸா!
இன்னும் உயிர் வாழ்கிறாய்..
இவ்வாண்டும்
கொசுக்களுக்கு உணவூட்ட.

○ இஸ்ஸா

89


காற்றில் அசையும் சிலந்தியே!
உன் மௌன மொழி எது?
நீ பாடாத பாடல்?

○ பாஷோ

90

கோடை இரவுப் பூச்சிகள்
கருகிச் செத்து வீழ்கின்றன
நான் கவிதை எழுதிய தாள்களில்.

○ ஷிகி



91

புத்தாடைகள் அணிந்தால் என்ன?
ஞாபகம் இருக்கட்டும்.. காக்கை
கறுப்புத்தான்
நாரை வெளுப்புத்தான்.

○ சோரா

92

வெப்பமாய் நகரும் பிற்பகல்
திடீரென்று நின்றன கைகள்
மெதுவாய் வீழும் விசிறி.

○ தாய்கி

93

குளிர் நடுக்கும் இரவெல்லாம்
அந்தக் குரங்கின் சிந்தனை..
நிலவைப் பிடிப்பது எப்படி?

○ ஷிகி



94

பனி படர்ந்த முட்செடி
எத்தனை அழகு! ஒவ்வொரு முள்ளிலும்
ஒரு பனித்துளி.

○ பூஸன்

95


இந்த ஊமை நாடோடி
பூக்கனவு காண்கிறதோ?
உறங்கும் வண்ணத்துப் பூச்சி.

○ ரேய்கான்

96

துணிச்சல்கார இராப்பாடி!
மன்னர் முன் கூட மாற்றிக்கொள்ள
மாட்டாய்
உன் இசையை.

○ இஸ்ஸா



97

இராப்பாடியின் புலம்பல்
ஓய்வில்லாக் கடலின் ஓலம்
விரைவில்.. விரைவில்.. விடியல்.

○ ஷிராவ்

98

நோய்ப்பட்ட பூஞ்செடி
மருத்துவம் பார்த்த எனக்கு
நன்றிக் கடனாய் ஒரு மொட்டு.

○ தாய்கி

99

சிட்டுக்குருவி!
இங்கும் அங்கும் எதைத் தேடுகிறாய்?
தொலைத்து விட்டாயா பையை?

○ இஸ்ஸா



100

சே! நிலையில்லாத உலகம்!
மூன்று நாட்கள் கவனிக்காத பூக்கிளை
மலர் இன்றி நிற்கிறாய் நீ!

○ ரயோடா

101


'தொடாதே! என் கனி மரத்தை'
சொன்ன நண்பன் சொல்லிக்கொண்டே
முறித்தான் கிளை எனக்காக.

○ தாய்கி

102

என் அன்புத் தந்தையின் சீற்றம்
மலரை நான் பறித்தபோது..
அருமையான நினைவு

○ தாய்ரோ



103

இப்போது, செர்ரி மரங்களை விட்டு
ஆயிரம் கன்னியர் ஓட்டம்..
புயல் நாயகன் சீற்றம்.

○ ஸடாயி

104


பிற்பகல் நேரத்துத் தூறல்..
நடையும் பேச்சுமாய்த் தெருவில்
குடையும் மழைக் கோட்டும்.

○ பூஸன்

105

தொலைதூரத்து வயல் வெளியில்
வயற்காட்டுப் பொம்மை நண்பன்
நான் நடக்கத் தான் நடப்பான்

○ ஸானின்



106

உன்னை அழைக்கத் தொடங்கினேன்
வந்துபார்! இந்த வணணத்துப் பூச்சிகளை .
ஓ! நான் தன்னந் தனியனாய்.

○ தாய்கி

107


வழிதவறிப் போன குழந்தை அழுகிறது..
இருண்ட வயல்களில் தடுமாறி
மின்மினிகளைப் பிடித்து.

○ ரையுசூயி

108

பாம்பு ஊர்ந்து மறைந்தது
ஆனால் ஒளிர்ந்த அந்தச் சின்னக்
கண்கள்..
புல்லில் மின்னும் பனித்துளி.

○ கியோஷி



109

நட்சத்திரங்களின் கண்ணாடித் தடாகம்
திடீரெனக் கோடைத் தூறல்
நீரில் கன்னக் குழிப்புகள்.

○ ஸோரா

110

நல்ல பையனாக இரு
எங்கள் வீட்டைக் கவனமாகப்
பார்த்துக்கொள்
சிள் வண்டுக் குழந்தாய்!

○ இஸ்ஸா

111

எழுந்திரு! வானத்தில் ஒளி!
மீளச் செல்வோம் பாதைக்கு
வண்ணத்துப் பூச்சித் தோழனே!

○ பாஷோ



112

காலைப் பூக்களுக்கு
அபாயாம் வரப் போகிறது..
சிலம்பப் பயிற்சி.

○ சோரா

113

அமைதியான பழைய நகரம்
பூக்களின் மணம் மிதக்கும்
மாலை மணியோசையும் கூட..

○ பாஷோ

114

அதிர்ஷ்டக்காரப் பிச்சைக்காரனே!
ஒளிவிடும் வானம்.. குளிர்ந்த பூமி
உன் கோடைப் பருவ ஆடை!

○ கிகாகு



115

இப்படித்தான் என் இனிய வாழ்வும்
முடிய வேண்டும்.. இன்னொரு மலர்
நீரில் வீழ்ந்து மிதந்து செல்ல

○ ஓனிட்சுரா

116


நான் வெளியே போகிறேன்
ஒற்றுமையாய் விளையாடுங்கள்
என் சிள்வண்டுப் பிள்ளைகளே!

○ இஸ்ஸா

117

அரவம் இல்லை அசைவும் இல்லை..
வயலில் தெருவில் இருள்
பரிதாபம்: நிலவு மறைந்தது

○ இமோஸெனி



118

நம்பிக்கையுடன் வாழ்வாயாக!..
மலர்ந்து, மங்கி வீழ்ந்திடும்
இந்த செர்ரி மலர் போல

○ இஸ்ஸா

119

கசந்த சிறு சிள்வண்டு
இளவெயில் நாளெல்லாம் புலம்பல்..
ஒருவேளை சிரிக்கிறதோ?

○ ஒஇமாரு

120

குறுகிய கோடை இரவு..
ஆனால் இந்தப் புனித இருளில்
ஒரு மலர் பூத்தது.

○ பூசன்



121

கடல் இருண்டது..
ஓ.. காட்டு வாத்துக்களின் குரல்
புலம்பி, சுழன்று, வெள்ளையாய்

○ பாஷோ

123

வாண வேடிக்கை முடிந்தது
பார்வையாளர்கள் போய்விட்டனர்..
ஆ, எத்தனை பரப்பு, இருள்!

○ ஷிகி

124

இலையுதிர்க் கொசுக்களே!
பாடுங்கள், கடியுங்கள்.. நான்
நெடுநாளாய்ச் சாவுக்குத் தயாரானவன்

○ ஷிகி



125

தனித்த குடை
வீட்டைக் கடக்கும் அந்தியில்..
மெதுவாய் வீழும் முதல் பனி

○ யாஹா

126

வானத்தையும் பூமியையும் மறைக்கும்
பூத்த வெண்மை..
பனி.. இடைவிடாப் பனி

○ ஹாஷின்

127

மெழுகுவத்தியைப் பார்!
என்ன பசிவெறி காற்றுக்கு..?
பனியில் வேட்டையாடும்

○ செஇரா



128

கண்களே! எல்லாம் பார்த்துவிட்டீர்கள்..
திரும்புங்கள்! திரும்பி வாருங்கள்
வெண்ணிற மலர்களுக்கு

○ இஸ்ஷோ

129

மலரின் இதழ்கள் வீழும்
மெல்ல ஓசையின்றி அமைதியாய்
அவை ஆயத்தமான போது

○ எட்சுஜின்

130

ஓர் இலை வீழ்கிறது..
அந்தோ அந்தோ மற்றொன்று மற்றொன்று
வீழ்கிறது

○ ரான்செட்சு



131

நாற்று நடும் உழவனின்
சுறுசுறுப்பான பாட்டு
எல்லாப் பாட்டுக்களுக்கும் **விதை**

○ பாஷோ

132

வீழும் இதழ்களைப் பார்த்தபடி
சின்னஞ் சிறு குழந்தை
புத்தரைப் போலவே தோன்றும்

○ குபுட்ஸு

133

மலையின் உச்சியில் கேட்டது
வானம்பாடியின் மெல்லிய பாடல்
எங்கோ கீழே இருந்தது..

○ பாஷோ



134

எழுந்திரு! எழுந்திரு! வா..
உறங்கும் வண்ணத்துப் பூச்சியே!
சேர்ந்துகொள் பயணத்தில் என்னோடு

○ பாஷோ

135

அரிசி களையும் அவள்
முறுவலிக்கும் முகத்தை.. ஒருகணம்
ஒளியேற்றும் மின்மினி

136

முறுக்கிய நூல் அறுந்ததும்
படபடத்து விழுந்தது காற்றாடி
பிறகு.. உயிர்ப்பில்லை

○ குபோன்ட்டா



137

எங்கே குயிலின் இருண்ட பாடல்
வானம்பாடியின் தெளிந்த பாடலில்
குறுக்கிடுகிறதோ.. அங்கேதான் நான்

○ கியோராய்

138

இந்த வசந்தத்தில் என்வீட்டில்
ஒன்றும் இல்லை.. உண்மைதான் .
அப்படிஎன்றால்
எல்லாம் இருக்கிறது

○ சோடோ

139

பொறாமைக்குரிய இலைகள்
அடடா! எவ்வளவு அழகு!
வீழ்வதற்கு முன்

○ ஷிகி



140

வாழ்த்துக்கள்!
இருந்தாலும்.. எனக்குத்தெரியும்
இந்த ஆண்டு அப்படித்தான்

○ இஸ்ஸா

141

புத்தாண்டின் முதற் கனவு
அந்தரங்கமாய் ஒளித்தேன்
என்னுள் சிரித்தபடி

○ ஹோயு

142

காலை வணக்கம், சிட்டுக்குருவி!
பெருக்கிய முற்றத்தில் எழுதுகிறாயா
பனிபடிந்த கால்களால்!

○ ஷிகி



143

மேகங்களுக்கு அப்பாலிருந்து
தூர தேசக் குரல்களைக் கேட்கிறேனா?
ஓ.. அற்ப வானம்பாடிகள்

○ கியோரோகு

144


காலைப் பனித் தெரு..
வெள்ளை நிறத்தால் யாரோ வரைகிறார்
மக்களின் கனவை

○ பூஸன்

145

கணநேரம் ஒளிர்கிறாய்
மறு கணம் இருள்கிறாய்
சக மின்மினியே!

○ சினே - ஜோ



146

பனி உருகுகிறது..
தூரத்து பனி மலைகளில்
ஒரு கரையும் காகம்

○ ஜியோடாய்

147


மௌனமான செர்ரிப் பூக்களே!
உங்கள் பழைய நாவன்மையோடு
மீண்டும் பேசுங்கள்.. என் மனச் செவிக்கு

○ ஓனிட்சுரா

148

எனக்கு வயதாகிவிட்டது
வசந்தத்தின் நளின நாட்களும்
அழவைக்கின்றன என்னை

○ இஸ்ஸா



149

பிடிவாத மரங்கொத்தி
அந்தியிலும் கொத்திக் கொண்டிருக்கும்
அதே இடத்தை

○ இஸ்ஸா

150

என் நிலத்தை விற்ற அந்த இரவில்
உறங்கவே இல்லை
தவளைகள் அழைப்பால்

○ ஹோகுஷி

151

பிடித்த போது
விரல் நுனிகளில் ஒளியேற்றியது
மின்மினி

○ தைகி

ஹைகூ-ஓர் அனுபவம்

டாக்டர் கவிஞர் அப்துல் ரகுமான்

இரவில் என் மகளோடு திண்ணையில் உட்கார்ந்திருந்தேன். வானத்தின் மடிநிறைய நட்சத்திரப் பூக்கள். ''இதெல்லாம் என்ன தெரியுமா?'' என்றாள் என் மகள்; இல்லையென்று தலையசைத்தேன். ''இருட்டில் நாமெல்லாம் ஏதாவது தப்புப் பண்ணுகிறோமா என்று பார்க்கக் கடவுள் இவ்வளவு கண்களைத் திறந்து வைத்திருக்கிறார்'' என்றாள்.

ஓர் ஐந்து வயது வாயில் எவ்வளவு வயசான வார்த்தைகள்! என் கவிதைகள் வெட்கப்பட்டன. சிறியது என்பதற்காக எதையும் இளக்காரமாக நினைப்பதில்லை என்று அன்றைக்குச் சத்தியம் செய்து கொண்டேன். ஜப்பானிய நாட்டு 'ஹைகூ' கவிதைகளோடு எனக்கு அறிமுகம் ஆனபோது என் சத்தியத்தை நினைத்து சந்தோஷப்பட்டேன்.

உலகக் கவிதை வடிவங்களிலேயே எனக்கு மிகவும் பிடித்தது 'ஹைகூ' தான். அது சின்னதாக இருக்கும் பெரிய அற்புதம். வடிவத்தைப் பார்த்தால் வாமனன் மாதிரி; ஆனால் 'தாரை' வார்த்

தாலோ விசுக்கென்று விண்ணுக்கும் மண்ணுக்கு மாய் விசுவரூபமெடுத்து மூவுலகையும் அளந்து விடும் திரிவிக்கிரமன் மாதிரி. 'ஹைகூ'வுக்கும் மூன்றடிதான்.

ஒரு 'ஹைகூ'வைப் பார்ப்போம். மோரிடாகே என்ற கவிஞர் செர்ரி மரத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்; பூக்கள் மெதுவாகக் கீழே உதிர்ந்து கொண்டிருக்கின்றன. திடீரென்று ஒரு பூ தரையிலிருந்து கிளையை நோக்கிப் பறந்து போகிறது! என்ன, பூ பறக்கிறதா?கவிஞரே சொல்லட்டும். ''ஹைகூ'வைப் படிப்பதற்கு முன் ஒரு வார்த்தை. கவிதையின் மூன்று அடிகளையும் ஒரே மூச்சில் அள்ளி விழுங்கி விடாதீர்கள். முதல் இரண்டு அடிகளை மெதுவாகப் படித்து நிறுத்திக் கொள்ள வேண்டும். மீண்டும் முதலிலிருந்து ஆரம்பித்து நிறுத்திக் கொள்ளவேண்டும். பிறகுதான் மூன்றாவது அடியைப் படிக்க வேண்டும். படியுங்கள்:

> உதிர்ந்து வீழ்ந்த மலர்
> கிளைக்குத் திரும்புகிறது...
> ஓ! வண்ணத்துப் பூச்சி!

கடைசி அடி சுகமான 'மின்தாக்கு'த் தருகிறதல்லவா?

இவ்வளவுதான் என்று நினைக்காதீர்கள். இது ஆரம்பம். பருவம் அடைந்து ததும்பி நிற்கும் வீணை நரம்பை, விவரம் தெரிந்த விரல்கள் தொடத் தொடப் புதுப்புதுப் பரவசங்கள் புறப்

பட்டு வருமல்லவா? அதைப்போல்தான் 'ஹைகூ'வும். கொஞ்சம் மீட்டிப் பார்க்கலாம்.

செர்ரிப் பூக்கள் வசந்தத்தின் சின்னம்; இயற்கையின் மெல்லிய அழகுக்குக் குறியீடு. இந்தச் சின்ன அழகுகள் வாடி விடுவது எவ்வளவு பரிதாபம். ஆனால் இரக்கம் மிக்க இயற்கை இன்னொரு அழகை—வண்ணத்துப் பூச்சியை—அந்த இடத்தில் கொண்டு வந்து வைத்து, இழப்பை ஈடு செய்து விடுகிறது. ஓர் அழகு சிம்மாசனத்தை விட்டுஇறங்கினால், மற்றோர் அழகுக்குப் பட்டாபிஷேகம். (தயவு செய்து இங்கே அரசியல் பேசாதீர்கள்; பொருந்தாது.)

வசந்தம் போனால் என்ன? வரப் போகும் கோடையின் கைகளிலும் அழகிய பரிசுகள் இல்லையா? வண்ணத்துப் பூச்சி அதற்கோர் வாக்குறுதி!

வண்ணத்துப் பூச்சி பூவாகத் தெரிந்ததேன்? பார்வைக்கு இரண்டும் ஒன்றாகத் தெரிந்ததால் தானே? இப்படித்தான் சில நேரங்களில் நாம் இனிமையாக ஏமாற்றப்படுகிறோம்.

ஒரு வகையில் பார்த்தால் பூ, வாடி விழும் வண்ணத்துப் பூச்சி; வண்ணத்துப் பூச்சி பறக்கும் பூ.

உதிர்ந்த பூ கிளைக்குத் திரும்புகிறது என்பது கூட ஒரு வகையில் சரிதான். உதிர்ந்த பூ என்னவாகிறது? மக்கி, மண்ணோடு கலந்து உர

மாகி, அதே மரத்திற்கு உணவாகி, மீண்டும் பூவாக மறு அவதாரம் எடுக்கிறதல்லவா?

'அழகிய பொருட்கள் நிலையற்றவை; கணத்தில் மின்னி மறையக் கூடியவை. ஆனால் அழகு என்ற தத்துவம் நிரந்தரமானது.' இந்த ஸென்(Zen) புத்தமதத் தத்துவத்தையும் இந்த 'ஹைகூ' கலைப் பொட்டலம் கட்டி நம் கையில் கொடுத்து விடுகிறது.

எல்லாவற்றையும் வெளிப்படையாகச் சொல்லிக் கொண்டிருப்பது கவிதையின் வேலை இல்லை; கட்டுரையின் வேலை. நம்மில் பலருக்கு இந்தக் கலைத் தத்துவம் புரிவதில்லை. ஒரு காட்சியைக் காட்டுவதோடு 'ஹைகூ'வின் வேலை முடிந்து விடும். அதில் உள்ள அர்த்தங்களைத் தோண்டி இறைத்துக் கொள்வது வாசகன் பொறுப்பு. இந்த வகையில் வாசகனும் கவிதையில் ஒரு கூட்டுப் படைப்பாளி.

எளிய உயிரினங்களையும் நேசித்து இணக்கமாக வாழ்வது ஜப்பானியர்களுடைய பண்பாடு. அவர்கள் இதை,'வா' என்பர். 'ஹைகூ'க்களில் இந்த 'வா'வைப் பார்க்கலாம்.

சியோனிக்குச் சொந்தக் கிணறு உண்டு. ஆனால் பக்கத்து வீட்டில் போய்த் தண்ணீர் இரக்கிறாள். ஏன்?

யாராவது எனக்கு நீர் கொடுங்களேன்
என் கிணற்றைப் பிடித்துக் கொண்டது...
பூத்த இளங்கொடி

பாரி தேரைத்தான் தந்தான்; சியோனியோ கிணற்றையே தந்து விடுகிறாள்.

துயர நேரத்திலும் வாழ்க்கையை ரசிக்கிற ரகசியத்தை பாஷோ கற்றுத் தருகிறார்.

இந்த அழகிய கிண்ணத்தில்
பூக்களை அடுக்கிவைப்போம்
அரிசிதான் இல்லையே!

பாஷோவின் அழகுணர்ச்சி ஆச்சரியம் தருகிறதென்றால், மசாஹிடேயின் உணர்ச்சி அதிர்ச்சியைத் தருகிறது. தீ விபத்தில் அவருடைய வீடு எரிந்துபோனதில் அவருக்குத் திருப்தியாம்! ஏன் தெரியுமா?

என்வீடு எரிந்து போனதால்
நன்றாகப் பார்க்கமுடிகிறது...
உதிக்கும் நிலாவை

இந்தக் கவிதையைப் பாருங்கள். நம்முடைய இலக்கிய விமர்சகர்கள் ஞாபகத்திற்கு வருவார்கள்:

இந்த அழகிய பூக்களிடையே
ஒரு மரங்கொத்தி தேடுகிறது...
செத்த மரத்தை
—ஜோசோ

ஒரு காட்சியில் வாழ்க்கையின் அற்புதமான தரிச னத்தை, தத்துவ உண்மையின் மின்னல் வீச்சை ஏற்படுத்துகிற வல்லமை ஒவ்வொரு 'ஹைகூ'வுக் கும் உண்டு. இதோ சில 'ஹைகூ'க்கள்:

நாற்று நடும் பெண்கள்
எங்கும் சேறு...
அவர்கள் பாட்டைத் தவிர

—ரைஸான்.

மெதுவாக என் தோளைப் பற்றிய
இறந்த நண்பனின் கை போல்...
இந்த இலையுதிர்கால வெயில்

—குசடாஓ

ஆலயமணியின் மீது
ஓய்ந்து உறங்குகிறது
வண்ணத்துப் பூச்சி

—பூசன்

சிறைப் பிடித்த விரல்களில்
தீபம் ஏற்றியது
மின்மினி
—தைகி

ஒவ்வொரு 'ஹைகூ'வும் ஒரு மின்மினிதான்.

நன்றி: இன்றிரவு பகலில்

உலகக் கவிதை வடிவங்களில் வாமன வடிவம் கொண்டது 'ஹைகூ'. ஜப்பானியர்களின் அழகுணர்ச்சியின் — பண்பாட்டின் அடையாளம் ஹைகூ. சொற்சுருக்கம், இயற்கைச்சித்திரம், படிம வனப்பு. தத்துவப் பார்வை, உணர்வுக்கிளர்ச்சி — இவை ஹைகூவின் தனித்தன்மைகள்.

மகாகவி பாரதி ஹைகூபற்றிக் குறிப்பிட்டிருந்தாலும், 'நடை' போன்ற சிறு பத்திரிகைகளில் அவ்வப்போது ஹைகூ கவிதைகள் சில மொழி பெயர்க்கப்பட்டிருந்தாலும் தமிழில் முதன் முதலாக இப்போதுதான் 'ஒரிஜினல்' ஹைகூ கவிதைகள் நூல் வடிவில் வெளிவருகின்றன.

ஹைகூ என்ற அற்புதமான உலகத்தைத் தாம் தரிசித்ததோடு மற்றவர்களும் கண்டு களிகொள்ளும் வகையில் ஜப்பானிய மூலத்தின் நயமும் நளினமும் சுயமும் சுவையும் குன்றாமல் டாக்டர் தி. லீலாவதி நூற்றைம்பது ஹைகூ கவிதைகளைத் தமிழில் வழங்கியுள்ளார்.

டாக்டர் அப்துல்ரகுமானின் இரண்டு கட்டுரைகள் இந்நூலின் முன்னும் பின்னும் அமைந்து 'ஹைகூ' கவிதைகளைப் புரிந்து கொள்ள வாசகர்களுக்கு உதவுகின்றன.

உலக இலக்கிய வரிசையில் அன்னம் வெளியிடும் இரண்டாவது தொகுப்புநூல் இது.